DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No.160/2023**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness -4 (LW -5)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு.ரமேஷ்** | Caste | : |
| Father Name | : **திரு.செல்லப்பன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **18.09.2025.**

**PW -4 (LW -5 )**

(1, 2 எதிரிகள் ஆஜர். 3-வது எதிரி ஆஜர் இல்லை. பிஎன்எஸ்எஸ் பிரிவு 355 மனு அனுமதிக்கப்பட்டது.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்போது தொட்டியம் தாலுகா, உன்னியூரில் குடியிருந்து வருகிறேன். நான் திருப்பூரில் வேலை பார்த்து வருகிறேன். என்னுடைய அம்மா, அப்பா, குடும்பத்தினர் சுள்ளிபாளையத்தில் குடியிருந்து வருகிறார்கள். இறந்துபோன செல்லப்பன் எனது அப்பா. 1-வது எதிரி சுப்பிரமணியன் எனது பெரியப்பா. 2-வது எதிரி நல்லம்மாள் எனது பெரியம்மா. 3-வது எதிரி செல்வராஜ் எனது அண்ணன் முறை.

எங்கள் குடும்பத்தினருக்கு பூர்வீக சொத்து 2.8 ஏக்கர் நிலம் இருந்தது. அந்த நிலத்தை 12 வருடங்களுக்கு முன்பாக என்னுடைய அப்பாவும், ஆஜர் 1-வது எதிரி பெரியப்பாவும் சரிசமமாக பிரித்து கொண்டார்கள். எங்கள் நிலத்தில் நாங்கள் மாட்டு தீவனம் வளர்த்து வந்தோம். அதேபோல் எதிரிகள் நிலத்திலும் மாட்டு தீவனம் வளர்த்து வந்தார்கள். எங்களுக்கு சொந்தமான வயலில் உள்ள மாட்டு தீவனத்தை எங்களுக்கு தெரியாமல் எதிரிகள் குடும்பத்தினர் அறுத்து

MADURAI HIGH COURT TRICHY



வந்தனர்.

கடந்த 09.06.2021-ம் தேதி மாலை 05.45 - 06.00 மணியளவில் எனது அப்பா எதிரிகளிடம் சென்று ஏன் என்னுடைய வயலில் உள்ள மாட்டு தீவனத்தை அறுக்குறீர்கள் என்று கேட்டார். அப்போது அவர்களுக்குள் வாக்குவாதம் நடந்துள்ளது. அப்பொழுது 3-வது எதிரி செல்வராஜ் சூப்பர் எக்சல் டிஎன்28 கியூ 0682 என்ற வாகனத்தில் வந்தார். அவர் எனது அப்பாவை அடிப்பதற்காக துரத்தினார்.

எங்கள் தோட்டத்திற்கு அருகில் உள்ள நல்லியா கவுண்டர் மகன் சுப்பிரமணியன் தோட்டத்திற்கு அருகில் ஆடு வளர்ப்பதற்காக ஒரு கொட்டகை போட்டுள்ளனர். 3-வது எதிரி செல்வராஜ் என் அப்பாவை துரத்தி கொண்டு போய் அருவாளால் நடு மண்டையில் வெட்டிவிட்டார். எனது அப்பா கீழே விழுந்துவிட்டார். பின்னடியே சென்ற 2 மற்றும் 1-வது எதிரிகள் 1-வது எதிரி கடப்பாறையால் எனது அப்பாவின் இடது காலில் அடித்துவிட்டார். 2-வது எதிரி நல்லம்மாள் உருட்டு கட்டையால் எனது அப்பாவின் நெஞ்சு பகுதியில் அடித்துவிட்டார்.

அப்பொழுது அங்கு இருந்த நல்லியா கவுண்டர் மகன் சுப்பிரமணியன் தடுக்க சென்றார். அப்பொழுது 1-வது எதிரி சுப்பிரமணியனும், 3-வது எதிரி செல்வராஜும் அவரை அடித்து கீழே தள்ளிவிட்டனர். எங்கள் ஊரை சேர்ந்த சதீஸ்குமார், சிவக்குமார், பெரியசாமி மூன்று பேர்களும் அந்த வழியாக சென்றுள்ளனர். இந்த சத்தத்தை பார்த்து அந்த இடத்திற்கு மேற்படி மூவரும் ஓடி வந்தனர். அப்பொழுது 3-வது எதிரி செல்வராஜ் எனது அப்பாவை பார்த்து இதோடு செத்துபோடா என்று சொல்லிவிட்டு அங்கிருந்த எக்ஸல் இரு சக்கர வாகனத்தில் ஏறி மூன்று எதிரிகளும் தப்பித்து ஓடிவிட்டனர்.

அங்கிருந்த சதீஸ் என்பவர் ஆம்புலன்ஸ் வரவழைத்து எனது அப்பாவை நாமக்கல்லில் உள்ள மாருதி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். அப்பொழுதுதான் நான் சென்று மருத்துவமனையில் எனது

அப்பாவை பார்த்து என்ன நடந்தது என்று விசாரித்தபோது மேற்கண்ட விபரங்களை எனது அப்பா என்னிடம் சொன்னார். அதன் பிறகு அங்கு எனது அப்பாவை பரிசோதித்த மருத்துவர் நெஞ்சிலும், தலையிலும் அதிகமாக காயம் இருப்பதால் இங்கு சிகிச்சை அளிக்க முடியாததால் நாமக்கல்லில் உள்ள தங்கம் மருத்துவமனைக்கு கொண்டு சென்று அனுமதித்தோம். அங்கு 12 நாட்கள் சிகிச்சை முடிந்து எனது அப்பா வீட்டிற்கு வந்துவிட்டார். இது சம்பந்தமாக எனது அப்பா காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார்.

அதன் பின்பு கடந்த 06.07.2021–ம் தேதி மாலை 07.30 மணியளவில் எனது அப்பாவிற்கு நெஞ்சு மற்றும் தலை வலி இருப்பதாக நாமக்கல் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர் எனது அப்பா வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார். அதன் பின்பு 30.07.2021–ம் தேதி முசிறி நீதித்துறை நடுவரிடம் வழக்கு சம்பந்தமாக வாக்குமூலம் கொடுத்தோம். அதை நீதித்துறை நடுவர் பதிவு செய்தார். அதில் நான் கையெழுத்து செய்தேன். அப்பொழுது நீதிமன்ற கதவுகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. தட்டச்சர் செய்பவர் மட்டும் நீதிமன்றத்தில் இருந்தார். அந்த வாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்துள்ளேன். அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.5** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எ.த.கு.வி:</u>**

| | |
|---|---|
| **கேள்வி** | நீங்கள் என்ன படித்துள்ளீர்கள்? |
| **பதில்** | பி.காம் படித்துள்ளேன். |
| **கேள்வி** | நீங்கள் உங்கள் மனைவி, குழந்தைகளுடன் திருப்பூரில்தான் குடியிருக்கிறேன் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | சம்பவம் நடந்ததாக சொல்லும் 09.06.2021–ம் தேதி அன்று நீங்கள் |

MADRAS HIGH COURT

| | |
|---|---|
| | திருப்பூரில்தான் இருந்தீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | சம்பவத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | உங்களுக்கு தகவல் வந்தபோது என்ன நேரம் என்றால்? |
| **பதில்** | மாலை 06.10 மணியளவில். |
| **கேள்வி** | உங்களுக்கு யார் தகவல் சொன்னது? |
| **பதில்** | சங்கீத், சதீஸ்குமார். |
| **கேள்வி** | திருப்பூருக்கும், நாமக்கல்லுக்கும் இடையே எவ்வளவு தூரம்? |
| **பதில்** | 110 கி.மீ |
| **கேள்வி** | உங்களுக்கு தகவல் கிடைத்து எங்கு வந்தீர்கள் என்றால்? |
| **பதில்** | நான் மாருதி மருத்துவமனைக்கு வந்தேன். |
| **கேள்வி** | மாருதி மருத்துவமனைக்கு சென்ற நேரம் என்ன? |
| **பதில்** | 09.30 – 09.45 மணி இருக்கும். |
| **கேள்வி** | எவ்வளவு நேரம் மாருதி மருத்துவமனையில் இருந்தேன் என்றால்? |
| **பதில்** | சுமார் 1 மணி நேரம் இருந்தேன். |
| **கேள்வி** | மாருதி மருத்துவமனையில் உங்கள் அப்பாவை பார்த்தபோது சுயநினைவோடும், பேசக்கூடிய நிலையிலும் இருந்தார் என்றால்? |
| **பதில்** | திக்கி திக்கி பேசினார். சுயநினைவோடு இருந்தார். |
| **கேள்வி** | மாருதி மருத்துவமனைக்கு சென்றபோது அங்கு யார் யார் இருந்தார்கள்? |
| **பதில்** | சதீஸ்குமார், எனது அம்மா மற்றும் ஊர்க்காரர்கள் 10 பேர். |
| **கேள்வி** | தங்கம் மருத்துவமனைக்கு உங்கள் அப்பாவை அழைத்து சென்ற போது உங்கள் அப்பா பேசக்கூடிய நிலையில் இருந்தாரா? |
| **பதில்** | மாருதி மருத்துவமனையில் இருந்த நிலையிலேயேதான் அங்கும் இருந்தார். |
| **கேள்வி** | தங்கம் மருத்துவமனையில் இருந்தபொழுது தகவல் தெரிந்து அன்றைய தினம் இரவே போலீசார் வந்துவிட்டார்கள் என்றால்? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | அவ்வாறு போலீசார் வரும்பொழுது நேரம் என்ன? |
| **பதில்** | 12.00 – 01.00 மணி இருக்கும். |
| **கேள்வி** | போலீசார் வந்ததும் உங்கள் அப்பாவை விசாரித்தார்களா? |

| | |
|---|---|
| **பதில்** | விசாரித்தார்கள். |
| **கேள்வி** | அந்த சமயத்தில் உங்களையும் போலீசார் விசாரித்தார்களா? |
| **பதில்** | விசாரித்தார்கள். |
| **கேள்வி** | உங்கள் அப்பாவை போலீசார் விசாரித்தபோது அந்த விவரங்களை எழுதி கொண்டு உங்கள் அப்பாவிடம் கையெழுத்து பெற்று கொண்டார்களா? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | நீங்கள் தங்கம் மருத்துவமனையில் எத்தனை நாட்கள் இருந்தீர்கள்? |
| **பதில்** | 10 நாட்கள் இருந்தேன். |
| **கேள்வி** | உங்களை மருத்துவமனையில் விசாரித்தபிறகு இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்யவில்லை என்றால்? |
| **பதில்** | 30.07.2021–ம் தேதி அன்று விசாரித்தார். |
| **கேள்வி** | 30.07.2021–ம் தேதி அன்று போலீசார் உங்களை எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்? |
| **பதில்** | மாலை 05.30 மணிக்கு முசிறி நீதிமன்றத்தில் வைத்து விசாரித்தார்கள். |
| **கேள்வி** | உங்கள் அப்பாவின் ரத்தகறை படிந்த உடைகளை போலீசார் வாங்கி கொண்டார்களா என்றால்? |
| **பதில்** | லுங்கியை வாங்கி கொண்டார்கள். |
| **கேள்வி** | நீங்கள் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் குடும்பத்திற்கும் உங்கள் குடும்பத்திற்கும் உள்ள முன்விரோதம் காரணமாக நடக்காத சம்பவத்தை நடந்தவாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 18.09.2025 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 18.09.2025

MADURAI BENCH TRICHY

HIGH COURT LIBRARY

DEPOSITION OF WITNESS

In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.

Session Case No.160/2023

**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness -5 (LW -6)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.ராசம்மாள் | Caste | : |
| Husband Name | : திரு.செல்லப்பன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **18.09.2025.**

**PW -5 (LW -6)**

(1, 2 எதிரிகள் ஆஜர். 3-வது எதிரி ஆஜர் இல்லை. பிஎன்எஸ்எஸ் பிரிவு 355 மனு அனுமதிக்கப்பட்டது.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்போது தொட்டியம் தாலுகாவில் சுள்ளிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். இறந்துபோன செல்லப்பன் எனது கணவர். ஆஜர் 1-வது எதிரி சுப்பிரமணியன் எனது அக்காவின் கணவர். 2-வது எதிரி எனது அக்கா. எங்கள் பூர்வீக சொத்து 2.80 ஏக்கர் இருந்தது. அதில் எங்கள் குடும்பத்தினரும், எதிரிகள் குடும்பத்தினரும் சரிசமமாக பிரித்து கொண்டு தனித்தனியாக விவசாயம் செய்து கொண்டு வந்தோம்.

கடந்த 09.06.2021-ம் வருடம் எங்கள் வயலில் இருந்த மாட்டு தீவனத்தை எங்கள் அக்கா வீட்டில் அறுத்துவிட்டனர். இது சம்பந்தமாக எனது கணவர் எங்களது அக்கா கணவரிடம் கேட்டார். அப்பொழுது இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. 3-வது எதிரி செல்வராஜ் என்பவர் வண்டியில் வந்தபொழுது நல்லி கவுண்டர் மகன் சுப்பிரமணியன் தோட்டத்திற்கு அருகில் அருவாளால் எனது கணவரை வெட்டினார். 1-வது எதிரி சுப்பிரமணியன் கடப்பாறையால் எனது

MADRAS HIGH COURT - MADURAI BENCH

கணவரின் காலில் அடித்துவிட்டார். 2–வது எதிரி நல்லம்மாள் உருட்டு கட்டையால் எனது கணவரின் நெஞ்சில் அடித்துவிட்டார். இதை பார்த்த நல்லி கவுண்டர் மகன் சுப்பிரமணியன் தடுத்தார். அவரை 1–வது எதிரியும், 3–வது எதிரியும் அடித்து கீழே தள்ளிவிட்டனர்.

அந்த நேரத்தில் சதீஸ், பெரியசாமி, சிவகுமார் ஆகியோர் அந்த இடத்திற்கு வந்தனர். அவர்கள் சம்பவத்தை பார்த்துவிட்டு ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டனர். அப்பொழுது 3 வது எதிரி செல்வராஜ் என்பவர் உன்னை இத்தோடு கொன்று விட வேண்டும் என்று சொல்லிவிட்டு வண்டியை எடுத்து கொண்டு மூன்று பேரும் சென்றுவிட்டனர். பின்னிட்டு எனக்கு தகவல் கிடைத்து நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்குபோய் எனது கணவரிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அவர் அனத்தி கொண்டே சம்பவத்தை பற்றி சொன்னார்.

அப்பொழுது சிவகுமார் மற்றும் அங்கு இருந்தவர்கள் எல்லாம் சேர்ந்து ஆம்புலன்ஸ் வரவழைத்து நாமக்கல்லில் உள்ள மாருதி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அப்பொழுது அங்கு பரிசோதித்த மருத்துவர் எனது கணவருக்கு நெஞ்சிலும் தலையிலும் காயம் இருப்பதாக சொல்லி மேல்சிகிச்சைக்காக தங்கம் மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தோம். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று 15 நாட்கள் கழித்து எனது கணவர் வீட்டிற்கு வந்து இருந்தார்.

மீண்டும் 06.07.2021–ம் தேதி மாலை சுமார் 05.30 மணிக்கு மேல் எனது கணவர் நெஞ்சு மற்றும் தலை வலிப்பதாக சொன்னார். நாங்கள் உடனே எனது கணவரை கார் மூலம் நாமக்கல்லில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். எனது கணவரை பரிசோதித்த மருத்துவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார். மருத்துவரிடம் எதனால் எனது கணவர் இறந்தார் என்று கேட்டேன். அதற்கு அவர் தலையிலும், நெஞ்சிலும் ஏற்பட்ட காயத்தினால் இறந்துவிட்டதாக கூறினார்.

இது சம்பந்தமாக 30.07.2021–ம் தேதி நீதித்துறை நடுவர், முசிறி

அவர்களிடம் வாக்குமூலம் கொடுத்தேன். நடந்த விவரத்தை நீதித்துறை நடுவரிடம் சொன்னேன். அவர் அதை தட்டச்சு செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார். என்னிடம் காட்டப்படும் கையெழுத்துதான் நீதித்துறை நடுவர் அவர்களிடம் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து. அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.6** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி:**

| | |
|---|---|
| **கேள்வி** | நீங்கள் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால்? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | தகவல் கேள்விபட்டு கணவர் இருந்த இடத்தை சென்று பார்த்தபோது என் கணவரிடம் என்ன நடந்தது என்று கேட்டபோது அவர் அனத்திகொண்டே என்னிடம் சம்பவத்தை சொன்னதாக முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீரா? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | உங்கள் கணவர் இறந்த பிறகு மருத்துவரிடம் எதனால் இறந்தார் என்று நீங்கள் கேட்டபோது அவர் தலையிலும் நெஞ்சிலும் ஏற்பட்ட காயத்தினால் இறந்ததாக சொன்ன சங்கதியை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| **பதில்** | சொல்லியுள்ளேன். |
| **கேள்வி** | சம்பவம் நடந்த பொழுது வயல்காட்டில் நீங்கள் இல்லை, வீட்டில்தான் இருந்தேன் என்றால்? |
| **பதில்** | வீட்டில்தான் இருந்தேன். |
| **கேள்வி** | உங்களுக்கு தகவல் யார் சொன்னது? |
| **பதில்** | சாட்சி சுப்பிரமணியன் சொன்னார். |
| **கேள்வி** | சாட்சி சுப்பிரமணியன் எவ்வாறு தகவல் சொன்னார் என்றால்? |
| **பதில்** | ஆள்விட்டு அனுப்பினார். |
| **கேள்வி** | அந்த ஆள் வந்து உங்கள் வீட்டில் வந்து தகவல் சொன்னாரா? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | அன்றைய தினம் உங்கள் வீட்டிற்கு வந்து தகவல் சொன்ன நபர் யார் என்று சொல்லமுடியுமா என்றால்? |
| **பதில்** | தெரியாது. |

| | |
|---|---|
| **கேள்வி** | தகவல் கிடைத்து சம்பவ இடத்தில் போய் பார்த்தபொழுது உங்கள் கணவரை எங்கு பார்த்தீர்கள் என்றால்? |
| **பதில்** | வண்டி பாதையில் பார்த்தேன். |
| **கேள்வி** | நீங்கள் செல்லும்போது உங்கள் கணவரின் வேட்டி, சட்டை ஆகியவை ரத்தகறை படிந்திருந்தது என்றால்? |
| **பதில்** | எனது கணவர் சட்டை இல்லாமல் இருந்தார். அவரது லுங்கியில் ரத்தகறை இருந்தது. |
| **கேள்வி** | நீங்கள் போய் சம்பவ இடத்தை பார்த்தபொழுது தரையில் ரத்தகறை இருந்ததா என்றால்? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | எவ்வளவு நேரம் கழித்து ஆம்புலன்ஸ் வந்தது? |
| **பதில்** | இரவு 07.00 மணிக்கு வந்தது. |
| **கேள்வி** | அந்த ஆம்புலன்சில் யார் யார் சென்றீர்கள்? |
| **பதில்** | நான், எனது கணவர், சதீஸ் குமார் ஆகியோர்கள் ஆம்புலன்சில் சென்றோம். |
| **கேள்வி** | உங்கள் கணவர் ஆம்புலன்சில் போகும்போது பேசக்கூடிய நிலையில் இருந்தாரா என்றால்? |
| **பதில்** | பேசினார். ஆனால் திக்கி திக்கி பேசினார். |
| **கேள்வி** | மருத்துவமனையில் உங்கள் கணவரை சேர்த்தபொழுது நடந்த சங்கதியை மருத்துவரிடம் யார் சொன்னது? |
| **பதில்** | எனது கணவர்தான் மருத்துவரிடம் தகவல் சொன்னார். |
| **கேள்வி** | மாருதி மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தீர்கள்? |
| **பதில்** | 3 மணி நேரம். |
| **கேள்வி** | மாருதி மருத்துவமனையில் இருந்தபொழுதே போலீசார் தகவல் கிடைத்து அங்கு வந்துவிட்டார்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | தங்கம் மருத்துவமனைக்கு நீங்கள் சென்றபோது போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள்? |
| **பதில்** | இரவு 12.00 – 01.00 மணிக்கு வந்தார்கள். |
| **கேள்வி** | அப்பொழுது போலீசார் உங்கள் கணவரை விசாரித்து அவரிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | உங்கள் கணவரிடம் ரத்தகறை படிந்த லுங்கியை போலீசார் வாங்கி கொண்டார்களா என்றால்? |

| | |
|---|---|
| **பதில்** | வாங்கி கொண்டு சென்றார்கள். |
| **கேள்வி** | அப்பொழுது போலீசார் உங்களை விசாரித்தார்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | அதன் பிறகு போலீசார் எப்பொழுது விசாரித்தார்கள்? |
| **பதில்** | 30.07.2021 அன்று விசாரணை செய்தார்கள். |
| **கேள்வி** | அதற்கு முன்பு போலீசார் உங்களை விசாரித்தார்களா என்றால்? |
| **பதில்** | விசாரித்தார்கள். |
| **கேள்வி** | அவ்வாறு எப்பொழுது விசாரித்தார்கள் என்றால்? |
| **பதில்** | எனக்கு ஞாபகம் இல்லை. |
| **கேள்வி** | தங்கம் மருத்துவமனையில் இருந்து உங்கள் கணவரை டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அனுப்பி விட்டார்களா என்றால்? |
| **பதில்** | 15 நாட்கள் பிறகு அனுப்பிவிட்டார்கள். |
| **கேள்வி** | 15 நாட்களுக்கு பிறகு உங்கள் கணவர் எங்கு இருந்தார் என்றால்? |
| **பதில்** | சுள்ளி பாளையத்தில் எங்கள் வீட்டில்தான் இருந்தார். |
| **கேள்வி** | அதற்கு பிறகு உங்கள் கணவருக்கு நெஞ்சு வலிப்பதாக சொல்லி அவருடன் யார் யார் சென்றது? |
| **பதில்** | பக்கத்தில் இருப்பவர்கள் வந்தார்கள். யார் என்று பெயர் குறிப்பிட்டு சொல்ல முடியாது. |
| **கேள்வி** | உங்கள் கணவர் இறந்த பிறகு மறுநாள்தான் அவரது பிரேதத்தை உங்களிடம் கொடுத்தார்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் குடும்பத்திற்கும் உங்கள் குடும்பத்திற்கும் இருந்த முன்விரோதம் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்? |

<u>**மறுவிசாரணை**</u> **:** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 18.09.2025 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 18.09.2025

MADURAI BENCH OF MADRAS HIGH COURT, TRICHY